216—

ஆரம்ப சுகாதார நிலையம்

***11717—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கல்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கல்குடி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. 30 படுக்கைகள் வசதி இல்லாத ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நீர்ப்பழனி கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கல்குடி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குடி ஊராட்சி என்பது பெரிய ஊராட்சி,*

2022 மே 4]

சிறந்த ஊராட்சி. வருங்காலத்தில் அந்தப் பகுதி மக்களுடைய மருத்துவத் தேவையைக் கருத்தில் கொண்டு அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, 30 படுக்கைகள் கொண்ட, 24 மணி நேர மருத்துவச் சேவையை உறுதிப்படுத்தக்கூடிய திட்டம் என்பது சிறந்த திட்டம். அது 355 ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுவிட்டது. ஒன்றியத்திற்கு ஒன்று என்ற இலக்கை எய்திவிட்டதால், வருங்காலத்தில் ஒன்றியத்திற்கு இரண்டாவது அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டத்தை அரசு கருத்தில்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 73 கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், 242 கிராமப்புற துணை சுகாதார நிலையங்களும், 15 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கல்குடி கிராமமானது, 1,215 என்கிற அளவில் மக்கள்தொகை கொண்ட கிராமமாக இருக்கிறது. கல்குடி கிராமத்திலிருந்து ஏற்கெனவே 5 கி.மீ. தொலைவில் இராசநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கி.மீ. தொலைவில் விராலிமலை அரசு பொது மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. எனவே, போதுமான மருத்துவக் கட்டமைப்பு ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, ஒன்றியத்திற்கு இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துகின்ற பணி வரும்போது, அவருடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான கேள்வி. ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 மருத்துவர்கள் இருப்பார்கள். மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவர்கள் இருந்து 24 மணி நேரமும் சேவை செய்வார்கள். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து 10, 15 ஆண்டுகளாக ஒன்றியத்திற்கு ஒன்று என்ற இலக்கை நாம் நிர்ணயித்து அடைந்து விட்டோம். வருங்காலத்தில் ஓர் ஒன்றியத்தில் இரண்டாவது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்குகின்ற திட்டத்தை அரசு செயல்படுத்துமா? அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துகிற பணி நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பின்னர், 4 ஆண்டுகளில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்கூட தரம் உயர்த்தப்படவில்லை என்றாலும், அவர் முன்னாள் அமைச்சர். 4 ஆண்டுகள் வரை ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. இருப்பினும், அவருடைய கோரிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நிச்சயமாக எதிர்காலத்தில் ஓர் ஒன்றியத்திற்கு 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.